**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I, திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் நாள் வியாழக்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி திங்கள் 28-ம் நாள்**

**CC. No.149 of 2024**

**(CNR No.TNVP105341-2024)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C. C. No.149/2024 |
| | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் ஆய்வாளர்,<br>ஒலக்கூர் காவல் நிலையம்,<br>குற்ற எண். 158/2023,<br>இதச பிரிவுகள் 279, 304(A) |
| 2 | எதிரியின் விவரம் | | அஃப்ரோஸ், வயது 22,<br>த/பெ அஷ்ரப்,<br>நெ.1/73, பெண்கள் பள்ளிக்கூட வீதி,<br>மீனம்பூர் கிராமம்,<br>செஞ்சி வட்டம். |
| 3) | சம்பவ தேதி | : | 29.06.2023 |
| 4 | முறையீடு | : | 29.06.2023 |
| 5 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த நாள் | : | Bailed by Police |
| 6 | குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 10.10.2024 |
| 7 | குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள் | : | 20.11.2024 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:46:52 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | ---- | | |
| 9 | சாட்சிகளின் விசாரணை | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW-1 | 05.01.2026 | 06.02.2026 |
| | | | PW-2 | 05.01.2026 | 06.02.2026 |
| | | | PW-3 | 05.01.2026 | 06.02.2026 |
| | | | PW-4 | 07.02.2026 | 07.02.2026 |
| | | | PW-5 | 09.02.2026 | 09.02.2026 |
| | | | PW-6 | 09.02.2026 | 09.02.2026 |
| | | | PW-7 | 02.03.2026 | 02.03.2026 |
| 10) | கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)- ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 05.03.2026 | | |
| 11) | எதிரி தலைமறைவு காலம் பற்றிய விவரம் | : | இல்லை | | |
| 12) | மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | : | இல்லை | | |
| 13) | தண்டனை அல்லது உத்தரவு | : | எதிரி இதச மீது பிரிவுகள் 279, 304(A)- ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 255(1) ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. | | |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:00 +0530

| | | | |
|---|---|---|---|
| 14) | காலதாமதத்தின் விளக்கம் | : | -------- |

இவ்வழக்கானது கடந்த 10.10.2024-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 06.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கோட்டீஸ்வரன், B.A.,M.L. அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்,

## தீர்ப்புரை

**1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-**

கடந்த 29.06.2023 அன்று காலை 6.00 மணிக்கு திண்டிவனம் வட்டம், ஒலக்கூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சென்னை டு திருச்சி தேசிய நெடுஞ்சாலை கூச்சிக்கொளத்தூர் ஜங்ஷன் ரோட்டை மேற்கில் இருந்து கிழக்கு பக்கமாக நடந்து முழுவதுமாக கடந்து ரோட்டின் இடது ஓரம் சென்று கொண்டிருந்தபோது அதே மார்க்கமாக அவருக்கு பின்னால் வந்த TN 19 T 9965 என்ற எண் கொண்ட Yamaha FZ இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரி அப்ரோஸ் என்பவர் மேற்படி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஆரன் அடிக்காமலும் ஓட்டி வந்து சாட்சி .1ன் அப்பா குப்பன் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியதில் சாட்சி -1 ன் அப்பா குப்பன் என்பவருக்கு தலை, கை, கால் மற்றும் உடல் முழுவதும் பலத்த காயம் அடைந்து இறப்பை ஏற்படுத்தி குற்றம் புரிந்ததாக எதிரி மீது இதச பிரிவுகள்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:08 +0530

279, 304(A) ன்படி ஒலக்கூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கானது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. எதிரி நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச பிரிவு 207- ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4. வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரி மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் எதிரியின் செய்கையானது எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்றச்சாட்டுகள் குறித்து விளக்கி கூறி வினவிய போது எதிரி அவற்றை மறுத்து தான் குற்றவாளி இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5. இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சி, சான்றாவணங்கள் முன்னிடப்படவில்லை.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:15 +0530

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**

- ➔ கேள்விபட்ட சாட்சி மற்றும் மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றி கேள்விப்பட்டதாகவும் புகார் அளித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகியோர் விபத்து பற்றி சாட்சியம் அளித்து எதிரியை அடையாளப்படுத்தி உள்ளனர்.
- ➔ சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கு பதிவு செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ பார்வை மகசர் சாட்சியான அ.சா.5 சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.6 காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவு அளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.
- ➔ காவல் ஆய்வாளர் அ.சா.7 வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரியை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) **தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) - ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:21 +0530

9) அரசு தரப்பில் வாய்மொழி வாதம் முன்வைக்கப்படவில்லை.

10. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அ.சா.1 கேள்விபட்ட சாட்சியாவர், அ.சா.2, அ.சா.3 ஆகியோர் இறந்த நபரின் நெருங்கிய உறவினர்கள். இவர்கள் விபத்து சமயத்தில் சம்பவ இடத்தில் இருந்தார்களா? என்பது குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். புலன் விசாரணையில் அ.சா.2,அ.சா.3 ஆகியோர் எதிரியை பார்த்ததாக கூட சொல்லவில்லை. இவ்வழக்கில் தனி நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. சுமார் 70 வயது மதிக்கத்தக்க குப்பன் ரோட்டை கவனக்குறைவாக கடந்து ஏதோ ஒரு வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரியை குற்றவாளி அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வதிட்டார்.

11. வாய்மொழி வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் :-**

கேள்வியுற்ற சாட்சி மற்றும் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு. அமலதாஸ்** அவரது சாட்சியத்தில் கடந்த 29.06.2023 காலை 9 மணி அளவில் தனது அப்பா குப்பன் திண்டிவனம் செல்வதற்காக சென்னையிலிருந்து திண்டிவனம் நோக்கி வந்த போது TN 19 T 9965 பைக் வேகமாக வந்து அப்பா மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருள், ஆரோக்கிய டென்னிஸ் ஆகியோர் தகவல் சொன்னார்கள்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:29 +0530

எனவும், தகவல் அறிந்து மருத்துவமனைக்கு சென்று பார்த்தபோது தனது அப்பா இறந்துவிட்டார் எனவும், ஒலக்கூர் காவல் நிலையம் வந்து புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.1 சம்பவம் பற்றி தனக்கு நேரடியாக தெரியாது எனவும், சம்பவ சமயத்தில் தான் சென்னையில் வேலை செய்ததாகவும், புகாரில் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் கண்ணுற்ற சாட்சிகள் என்று சொல்லவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

13. கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திரு.ஆரோக்கியடென்னிஸ்** அவரது சாட்சியத்தில் வழக்கில் இறந்து போன குப்பன் தனது ஊரை சார்ந்தவர் எனவும், அ.சா.1 தனது மாமா எனவும், கடந்த 29.06.2023 காலை சுமார் 6 15 மணியளவில் தனது ஊரான கூச்சிக்கொளத்தூரில் உள்ள பஸ் ஸ்டாப் அருகே தானும், அருளும் டீ கடைக்கு சென்றபோது சென்னையிலிருந்து TN 19 T 9965 FZ Yamaha இருசக்கர வாகனம் வேகமாக வந்ததாகவும். குப்பன் திண்டிவனம் செல்வதற்காக ரோட்டை கடந்து பஸ் ஸ்டாப்புக்கு நடந்து வந்து கொண்டிருந்தபோது மேற்படி வாகனம் இடித்து கீழே விழுந்து விட்டார் எனவும். அடிபட்ட குப்பனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், விபத்து குறித்து அ.சா.1 க்கு தகவல் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை எதிரி ஓட்டினார் என குறிப்பிட்டுள்ளார்.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:34 +0530

14. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.2 விபத்தில் இருந்த குப்பனுக்கு சுமார் 68, 70 வயது இருக்கும் எனவும், அவர் ரோட்டை கடந்து பேருந்து நிறுத்தம் அருகே சென்றபோது விபத்து நடந்தது எனவும், இறந்தவர் நல்ல நிலையில் நடந்து கொண்டிருந்தார் எனவும், அவராகவே ரோட்டை கடந்து வந்து விட்டார் எனவும், போலீஸ் விசாரணையில் தானும், அருளும் திண்டிவனம் செல்லும்போது விபத்து நடந்ததாக சொல்லி உள்ளதாகவும், டீ கடைக்கு சென்றதாக சொல்லவில்லை எனவும், சம்பவ இடத்துக்கு அருகே ஒரு டீ கடை இருந்ததாகவும், தன்னையும், அருளையும் தவிர வேறு யாரும் இல்லை எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மற்றொரு கண்ணுற்ற சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு. அருள்** அவரது சாட்சியத்தில் கடந்த 29.06.2023 காலை சுமார் 6 மணி அளவில் அவரது கூச்சி கொளத்தூரில் உள்ள ஜங்ஷனில் டீ டையில் டீ குடிக்க சென்றபோது குப்பன் என்பவர் திண்டிவனம் செல்வதற்காக நடந்து சென்ற போது TN 19 T 9965 Yamaha இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாக ஒட்டி வந்து குப்பன் மீது மோதியதாகவும், குப்பனுக்கு அடிபட்டவுடன் ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், விபத்து குறித்து அ.சா.1 க்கு தகவல் சொல்லிவிட்டு மருத்துவமனை சென்றபோதும், குப்பன் இறந்து விட்டதாக சொன்னதாகவும் குறிப்பிட்டுள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் அ.சா.3 பேருந்து நிறுத்தமும், டீ கடையும் பக்கத்து, பக்கத்தில் இருந்ததாகவும், இறந்த நபர் ரோட்டை கடந்து வந்தபிறகு விபத்து நடந்ததாகவும், அ.சா.1 சொல்ல, சொல்ல

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:42 +0530

தான் புகாரை எழுதிக் கொடுத்ததாகவும், சம்பவ இடத்தில் ஒரே ஒரு கடை தான் உள்ளதாகவும் அருகில் மசாலா கடை இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

16. கடந்த 29.06.2023 காலை 6 மணி அளவில் சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை கூச்சிக்கொளத்தூர் கூட்ரோடு அருகே வழக்கில் இறந்து போன குப்பன் ரோட்டை மேற்கிலிருந்து கிழக்கு பக்கமாக முழுவதுமாக கடந்து இடது ஓரமாக சென்று கொண்டிருந்தபோது அதே மார்க்கமாக வந்த TN 19 T 9965 Yamaha இருசக்கர வாகனத்தை எதிரி அதிவேகமாக ஒட்டி வந்து மோதி குப்பனுக்கு கை, கால், உடல் முழுவதும் காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்பது அரசு தரப்பு வழக்காகும். அ.சா.1 வழக்கில் இறந்த நபரின் மகன் அவர் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் இறந்த நபரின் உறவினர்கள். அ.சா.1 சம்பவம் குறித்து கேள்விப்பட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்துவிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவ இடத்தில் இருந்ததாகவும், விபத்தை பார்த்ததாக சாட்சியம் அளித்து எதிரியை அடையாளப்படுத்தி உள்ளனர். வழக்கில் எதிரி குறித்து இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. புகார் மற்றும் அ.சா.1 பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவு 161(3) ன் கீழான வாக்குமூலத்தில் விபத்து பற்றி அவரது உறவினரான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் தகவல் சொன்னதாக குறிப்பிடவில்லை.

17. அ.சா.2, அ.சா.3 ஆகியோர் டீ கடைக்கு செல்லும்போது விபத்தை பார்த்ததாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:47 +0530

குறிப்பிட்டுள்ளனர். மாதிரி வரைபடத்தில் திருச்சி - சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கிழக்கு பக்கமாக கூச்சிக்கொளத்தூர் பஸ் நிறுத்தம், தேசிய நெடுஞ்சாலை கேமரா கோபுரம், எவரெஸ்ட் மசாலா கம்பெனி கட்டிடம், முருகன் டீ கடை, ஏரி ஓடை, கால்வாய் ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளது. எவரெஸ்ட் மசாலா கம்பெனி கட்டிடத்தின் முன்பாக தார் சாலையில் ரோட்டின் இடது பக்கமாக சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.2, அ.சா.3 ஆகியோர் டீ கடைக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில், சம்பவ இடத்திற்கு அருகே உள்ள முருகன் டீ கடையில் உள்ள நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. சம்பவ சமயத்தில் குப்பன் ரோட்டை முழுவதுமாக கடந்து விட்டு பேருந்து நிறுத்தம் அருகே சென்ற போது விபத்து நடந்ததாக அ.சா.2 குறிப்பிட்டுள்ளார். அ.சா.3 சம்பவ இடத்தில் பேருந்து நிறுத்தமும், டீ கடையும் பக்கத்து, பக்கத்தில் இருந்ததாகவும், அங்கு ஒரே ஒரு டீ கடை மட்டும் இருந்ததாகவும், மசாலா கடை இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைகள் மற்றும் அது அமைந்துள்ள இடம் குறித்து அ.சா.2, அ.சா.3 ஆகியோர் மாதிரி வரைபடத்திற்கு முரண்பட சாட்சியளித்துள்ளனர். அ.சா.2, அ.சா.3 ஆகியோருக்கு பதிவு செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவு 161(3) ன் கீழான வாக்குமூலங்களில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் ஓட்டுநர் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை.

18. வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.7 நீதிமன்ற கேள்வியின் போது விபத்தில் சம்பந்தப்பட்ட இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் முகமது அப்சல்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:53 +0530

எனவும், அவரை இவ்வழக்கில சாட்சியாக விசாரிக்கவில்லை எனவும், விபத்தில் சம்பந்தப்பட்ட சேதமடைந்த வாகனத்தை எதிரி தன்னிச்சையாக காவல் நிலையத்தில் ஒப்படைத்ததால் உரிமையாளரை விசாரிக்கவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். 29.06.2023 அன்று விபத்து ஏற்பட்டு, அன்றைய தினமே இரு சக்கர வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 03.07.2023 அன்று காலை 10.15 மணியளவில் எதிரி காவல் நிலையம் முன்பு ஆஜரானதாகவும், அவரை கைது செய்ததாகவும் காவல் ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அந்த வாகனத்தின் உரிமையாளரை வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. சேதமடைந்த வாகனத்துடன் காவல் நிலையம் முன்பாக ஆஜரானவரை கைது செய்து எதிரியாக சேர்த்துள்ளனர் என்பது தெளிவாகிறது. எதிரி காவல் நிலையத்தில் ஆஜரான பிறகு கண்ணுற்ற சாட்சிகள் எதிரியை அடையாளம் காண்பித்து மறுவாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. எதிரியை கைது செய்து காவல்நிலையத்தில் பிணையில் விடுவித்தபோதிலும் அவரை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. சம்பவ இடத்திற்கு அருகில் இருபுறமும் பேருந்து நிறுத்தம் உள்ள நிலையில் காலை 6:00 மணி என்ற போதிலும் தனி நபர்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் புலன் விசாரணையின் போது எதிரி குறித்து எவ்வித குறிப்பும் சொல்லாமல் நீதிமன்ற சாட்சியத்தில் முதல்முறையாக எதிரியை அடையாளப்படுத்தி உள்ளனர். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடைகள் குறித்து அதன் அமைப்பு

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:47:58 +0530

குறித்து அ.சா.2, அ.சா.3 ஆகியோர் முரண்பட சாட்சியமளித்துள்ளது அவர்கள் அந்த இடத்தில் இருந்தார்களா? என்பதை சந்தேகிக்கும் வகையில் உள்ளது. மேலும் அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவ இடத்தில் எதிரி வேகமாக இரு சக்கர வாகனத்தில் வந்ததாக குறிப்பிட்டுள்ளனர். எனினும் கவன குறைவாக வந்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. மேற்படி காரணங்களினால் சம்பவம் குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

19. பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.5 திரு. கணபதி** அவரது சாட்சியத்தில் 29.06.2023 காலை 11 மணியளவில் கூச்சிக்கொளத்தூர் மாரியம்மன் கோயில் அருகே உள்ள டீ கடையில் தானும், செல்வமும் நின்று கொண்டிருந்த போது ஒலக்கூர் போலீசார் விபத்து சம்பந்தமாக விசாரித்து வரைபடம் வரைந்து பார்வை மகசரில் இரண்டாவது சாட்சி கையொப்பம் பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளனர். அ.சா.5 குறுக்கு விசாரணையில் விபத்து நடக்கும் போது தான் முருகன் டீ கடையில் இருந்ததாகவும், விபத்து சம்பந்தமாக ஒரு கையொப்பம் செய்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்ற கேள்வியின் போது அ.சா.5 விபத்து சமயத்தில் முருகன் டீ கடையில் இருந்ததாகவும், சத்தம் கேட்டு வந்து பார்த்தபோது சென்னை திண்டிவனம் சாலையில் சுவிப்ட் கார் நின்று கொண்டிருந்ததாகவும், அதன் அருகே ரத்த காயத்துடன் குப்பன் கிடந்தார் எனவும் குறிப்பிட்டுள்ளார். அ.சா.5 டீ கடையில் இருந்த போது சத்தம் கேட்டு வந்து அடிபட்ட குப்பனை பார்த்ததாகவும்,

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:04 +0530

அருகில் ஒரு கார் இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். புலன் விசாரணை அதிகாரி இவ்வழக்கில் கார் சம்பந்தப்பட்டதாக அவரது விசாரணையில் தெரிய வரவில்லை என குறிப்பிட்டுள்ளார்.

20. மற்றொரு பார்வை மகசர் சாட்சியான **அ.சா.6 திரு. செல்வம்** அவரது சாட்சியத்தில் பேட்டை காவல் நிலையத்திற்கு சென்றபோது பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பத்தை செய்ததாக குறிப்பிட்டுள்ளார். அ.சா.6 பிறழ் சாட்சியமாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

21. **காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 திரு. கலைமணி** அவரது சாட்சியத்தில் கடந்த 29.06.2023 காலை 10 மணி அளவில் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று வழக்கு பதிவு செய்ததாகவும், ஆய்வாளரின் பார்வைக்கு வைத்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். குறுக்கு விசாரணையில் அ.சா.4 புகாரில் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் பெயரை குறிப்பிட்டு சொல்லவில்லை எனவும், இறந்த நபர் 70 வயதுக்கு மேல் இருக்கும் எனவும், அவர் சாலையை கடந்து நடந்து வந்தபோது விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

22. வழக்கின் புலன் விசாரணை அதிகாரி **அ.சா.7 திருமதி. கலைச்செல்வி காவல் ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 29.06.2023 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் கலைமணி பதிவு செய்த இவ்வழக்கினை தனது மேல் விசாரணைக்கு எடுத்துக்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:10 +0530

கொண்டு காலை 11 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். சாட்சிகளை விசாரித்து வாக்கு மூலம் பதிவு செய்துள்ளார் . அன்றைய தினமே மதியம் 1 மணிக்கு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் குப்புசாமியின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் விசாரித்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார். 3/7/2023 அன்று காலை 10 15 மணியளவில் காவல் நிலையம் முன்பு ஆஜரான எதிரியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வு உட்படுத்தி மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். இறந்து போன குப்புசாமி மீது பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணை முடித்துக் கொண்டு எதிரியின் மீது இதச சட்டப்பிரிவுகள் 279, 304(A) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்.

23. எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் போது அ.சா.7 புகார்தாரர் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை எனவும், விபத்து நடந்த இடம் காலை 6:15 என்பதால் பேருந்து நிறுத்தம் கூட்டமாக இல்லை எனவும், இறந்த நபருக்கு சுமார் 70 வயது இருக்கும் அவர் ரோட்டில் முழுவதுமாக கடந்து பேருந்து நிறுத்தத்திற்கு செல்லும்போது விபத்து ஏற்பட்டதாகவும், இவ்வழக்கில் சிசிடிவி பதிவுகளை தாக்கல் செய்யவில்லை எனவும், சாட்சிகள் எதிரியை அடையாளம் காட்டி வாக்குமூலத்தில்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:16 +0530

சொல்லவில்லை எனவும், புகாரில் அடிபட்டவரின் பெயர் குப்பன் எனவும், பிரேத விசாரணையில் குப்புசாமி என உள்ளதாகவும், இறந்த நபரின் பெயர் குப்புசாமி, ஊர் வழக்கின் அடிப்படையில் குப்பன் என சொல்வார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

24. அ.சா.ஆ.8 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் TN 19 T 9965 இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் முகமது அப்ரத் எனவும். ஓட்டுனர் எதிரி அப்ரோஸ் எனவும். வாகனத்திற்கும் முன் பகுதியில் பல்வேறு சேதங்கள் காணப்பட்டதாகவும், இயந்திர கோளாறினால் விபத்து ஏற்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரேத பரிசோதனை சான்றில் குப்பன் வயது 70 என்பவருக்கு 29.06.2023 மதியம் 3 மணி அளவில் பிரேத பரிசோதனை நடந்ததாகவும், அவருக்கு தலை, முகத்தில் வெளிப்புற காயங்களும், பல்வேறு உள்புற காயங்களும் ஏற்பட்டு காயத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் இறந்திருக்கக்கூடும் என சான்று வழங்கப்பட்டுள்ளது.

25. வழக்கில் இறந்து போன குப்பன் என்பவரின் மகனான அ.சா.1 சம்பவம் குறித்த கேள்விப்பட்டதாகவும், புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் சம்பவ இடம் குறித்து முரண்பட சாட்சியம் அளித்துள்ளனர். எதிரி குறித்து வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அ.சா.2, அ.சா.3 ஆகியோர் புலன் விசாரணையில் எதிரி குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. விபத்து நடந்து 4 நாட்கள் கழித்து காவல் நிலையம் முன்பு சேதமடைந்த இருசக்கர வாகனத்துடன்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:21 +0530

ஆஜரான எதிரியை கைது செய்ததாக புலன் விசாரணை அதிகாரி குறிப்பிட்டுள்ளார். வாகனத்தின் பதிவு எண்ணை குறிப்பிட்டு வழக்கு பதிவு செய்த போதிலும், அந்த வாகனத்தின் உரிமையாளர் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. கண்ணுற்ற சாட்சிகள் எதிரி குறித்து அடையாளம் காண்பித்து மறுவாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை. பார்வை மகசர் சாட்சியான அ.சா.5 சம்பவ இடத்தில் வரைபடம் வரைந்தது பற்றி குறிப்பிட்டுள்ளார். மற்றொரு பார்வை மகசர் சாட்சியான அ.சா.6 காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ததாக குறிப்பிட்டுள்ளார். சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.4 வழக்கு பதிவு செய்தது பற்றியும், காவல் ஆய்வாளர் அ.சா.7 வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி கவன குறைவாக வந்ததாக கண்ணுற்ற சாட்சிகள் குறிப்பிடவில்லை. சாலை முழுவதுமாக கடந்து இடது புறமாக நடந்து சென்றபோது விபத்து நடந்ததாக வழக்கு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிலையில், மாதிரி வரைபடத்தில் சாலையில் மையப்பகுதியின் அருகே இடது புறமாக சம்பவ இடம் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து குப்பன் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி குப்பன் இறந்தார் என்ற குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:27 +0530

26. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) - ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

27. இறுதியாக, எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304(A) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச பிரிவு 255(1)- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

28. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள், வியாழக்கிழமை 12-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:32 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.அமலதாஸ் | நிகழ்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | திரு.ஆரோக்கிய டென்னிஸ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு.அருள் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | திரு.கலைமணி | சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் |
| அ.சா.5 | திரு.கணபதி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.6 | திரு.செல்வம் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.7 | திருமதி.கலைச்செல்வி காவல் உதவி ஆய்வாளர் | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.06.2023 | புகார் மனு | அ.சா -1 |
| அ.சா.ஆ.2 | 29.06.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா. 4 |
| அ.சா.ஆ.3 | ------- | பார்வை மகசரில் உள்ள அ.சா.5 ன் கையொப்பம் | அ.சா. 5 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:38 +0530

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.4 | ------- | பார்வை மகசரில் உள்ள அ.சா.6 ன் கையொப்பம் | அ.சா.6 |
| அ.சா.ஆ.5 | 29.06.2023 | பார்வை மகசர் | அ.சா.7 |
| அ.சா.ஆ-6 | 29.06.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| அ.சா.ஆ.7 | 29.06.2023 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.8 | 03.07.2023 | TN 19 T 9965 என்ற பதிவெண் கொண்ட மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.7 |
| அ.சா.ஆ.9 | 29.06.2023 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.7 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.12 17:48:43 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.